# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2010 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, புலத்திசி தறுவோ மன்ற நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2010*, பெப்புருவரி மாதம் 12 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2010 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க புலத்திசி தறுவோ மன்ற நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

[2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. (கூட்.) 5/2008

## புலத்திசி தறுவோ மன்ற நம்பிக்கைப்பொறுப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

“புலத்திசி தறுவோ மன்ற நம்பிக்கைப்பொறுப்பு” என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புடைய எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக பொலநறுவை மாவட்டத் தில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலா லும், விண்ணப்பத்தை அனுமதிப்பது பொதுமக்களின் நன்மைக் கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம் 2010 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, “புலத்திசி தறுவோ மன்ற நம்பிக்கைப்பொறுப்பு” (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

புலத்திசி தறுவோ மன்ற நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும், இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடு செய்யப்படும் தற்போது “புலத்திசி தறுவோ மன்ற நம்பிக்கைப்பொறுப்பின்” உறுப்பினர்களாக இருக்கின்ற அல்லது இத்தால் அமைத்துரு வாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) உறுப்பினர் களாக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோ ரான அத்தனை ஆட்களும் “புலத்திசி தறுவோ மன்ற நம்பிக்கைப்

பொறுப்பு" என்ற பெயர்மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங் களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்ட தாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) ஏழைச் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் கல்வி செயற்பாடுகளையும் முன்பயிற்சி செயற்பாடுகளையும் ஒழுங்குசெய்தலும் நடாத்துதலும் அபிவிருத்தி செய்தலும்;

(ஆ) இளைஞர்களின் திறமைகளை மேம்படுத்தலும் ;

(இ) விவசாயிகளை ஊக்குவித்தலும் இளம் விவசாயிகள் ஒழுங்கமைப்புக்களைத் தாபித்தலும் ;

(ஈ) வாழ்க்கைத் தொழிலுக்கான முற்கல்வி, விளையாட்டுத் துறை செயற்பாடுகள், தலைமைத்துவம் மற்றும் கணனி, ஊடகத்துறை, தமிழ், ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளில் இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதற் கான சந்தர்ப்பங்களை வழங்குதலும் ;

(உ) கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், செயலமர்வு களை நடாத்துவதன்மூலம் தேசிய ஐக்கியத்தினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆட்களைப் பயிற்றுவித்தலும் ;

(ஊ) அளிப்புகள், பரிசுகள், புலமைப்பரிசில்கள் மற்றும் இணையுரிமை என்பவற்றை வழங்குவதன்மூலம் தேசிய ஐக்கியத்திற்குப் பங்களிப்புச் செய்த பிரபல்ய மான ஆட்களை நினைவுகூருதலும் கௌரவித்தலும் ;

(எ) நூல்நிலையங்கள், சுவடிகள் மற்றும் இலங்கையில் சகல இனப்பிரிவினர்களினதும் கலாசார விழுமியங்களைப் பேணுதற்கும் மற்றும் பாதுகாத்தலுக்கும் நிலையங்கள் போன்றவற்றை நிறுவுதல் ;

(ஏ) சிறுவர், பெண்கள் மற்றும் அநாதைகளின் நலன்கருதி நலன்புரி செயற்பாடுகளை மேம்படுத்துதலும் ;

(ஐ) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உதவி தேவைப்படும் மாணவர்களுக்குப் புலமைப்பரிசில், கடன் உதவி, முற்பணங்கள், மானியங்கள் என்ற முறையில் உதவிகளை வழங்குதலும் ;

(ஒ) நாதியற்றோர், இயலாதவர்கள், முதியோர், நோயாளர்கள் மற்றும் இடம்பெயர்ந்தோர் ஆகியோருக்கு நலன்புரி மற்றும் புனர்வாழ்வளிப்பதற்காக நிறுவனங்களைத் தாபித்தலும் பராமரித்தலும் ;

(ஓ) இன, மத வேறுபாடின்றி மக்களிடையே பரஸ்பர புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்தலும்;

(ஔ) சூழலைப் பாதுகாப்பதற்கும் முகாமை செய்வதற்கும் பேணிக்காப்பதற்கும் கருத்திட்டங்களை, தாபித்தலும் பராமரித்தலும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக்கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், அல்லது வாடகைக்கெடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்றல் அத்துடன் கொடுத்து மாற்றல் அல்லது வேறுவகையில் பராதீனப்படுத்தல், பாரபந்தத்திற்குட்படுத்தல் அல்லது கையுதிர்த்தலும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது கூட்டுத்தாபனத்தால் அதன் சார்பில் அதிகரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் மூலமோ அல்லது முகவர்மூலமோ செய்து கொள்ளுதலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும்;

(இ) காசாக அல்லது பொருளாகக் கொடைகளையும், நன்கொடைகளையும், அன்பளிப்புகளையும் ஏற்றுக் கொள்ளுதலும் ;

(ஈ) அதன் நிதிகளை முதலீடுசெய்தலும், நம்பிக்கைப் பொறுப்புக்களை உருவாக்குதலும், நிருவகித்தலும், ஏதேனும் வங்கியில் நடைமுறை வைப்பு அத்துடன் சேமிப்புக் கணக்குகளைப் பேணுதலும் ;

(உ) புத்தகங்களையும், சஞ்சிகைகளையும், பருவவிதழ் களையும் ஏனைய நூல்களையும் வெளியிடுதல் அல்லது வெளியிடச் செய்தல் அத்துடன் நூலகங்கள், புத்தகக் கடைகள், அச்சகங்களைத் தாபித்தலும் பேணு தலும் ;

(ஊ) கூட்டுத்தாபனம் தகுதியென எண்ணக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப் பின்மீதும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக பணம் முற்பணமாகக் கொடுத்தலும் அல்லது கடன் கொடுத்தலும், கடன்பெறுதலும் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்குத் தேவைப்படும் அலுவலர்களையும் சேவை யாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், இடமாற்றுதல், அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப் பாட்டை பிரயோகித்தல் அத்துடன் அவர்களைப் பதவிநீக்குதலும், அவர்களின் சேவை நியதிகளையும் நிபந்தனைகளையும் விதந்துரைத்தலும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, தவிசாளர், உதவித்தவிசாளர், கௌரவ செயலாளர், கௌரவ உதவிச் செயலாளர், பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்பது வேறு உறுப்பினர்களையும் கொண்ட (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கட்டுப்பாட்டுச் சபை ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன் நேர்முந்திய நாளன்று பதவிவகித்த மன்றத்தின் கட்டுப்பாட்டுச்சபையே கூட்டுத்தாபனத்தின் முதலாவது கட்டுப்பாட்டுச்சபையாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் நியதிகளின்படி ஒரு தவிசாளர் தேர்ந்தெடுக்கப்படும்வரை திரு. மைத்திரிபால சிரிசேன கூட்டுத்தாபனத்தின் முதலாவது கட்டுப்பாட்டுச்சபையின் தவிசாளராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமொன்றில் அல்லது அந்நோக்கத்துக்கென கூட்டப்பட்ட ஏதேனும் விசேட பொதுக் கூட்டத்தில் இருவார அறிவித்தல் கொடுத்தும், சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் பெரும்பான்மை வாக்குக் கொண்டும், கூட்டுத்தாபன உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல், அவர்களை விலக்குதல் என்பவற்றுக்காகவும், பதவிதாங்குநர்களினதும் தத்துவங்கள், நடத்தை, கடமைகள் என்பவற்றுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறைக்காகவும் கூட்டுத்தாபன அலுவலர்கள், ஊழியர்களின் நடத்தை, கடமைகள், பணிகள் என்பவற்றுக்காகவும், வேறுவகையில் பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச்

சட்ட முறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப் பட்டதும், அவை அதைப் போன்றதொரு கூட்டத்தில் அதை யொத்த முறையில் மாற்றப்படலாம், திருத்தப்படலாம், அவற்றுக் குச் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப் படற்பாலனவையும் மன்றத்திற்கு செலுத்தப்படற் பாலனவையுமான தனிசுகள்.*

**7**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அந்நாளன்று மன்றத்திற்கு வருமதி யாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண் டிருத்தல் வேண்டும் (இது இதனகத்துப்பின்னர் நிதியம் எனக் குறிப்பீடுசெய்யப்படும்).

(2) பின்வருவன நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும் :-

(அ) இச்சட்டத்தின்கீழ் அதனுடைய தத்துவங்களை, பணிகளை மற்றும் கடமைகளை பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் கூட்டுத்தாபனத் தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டிலா யினுஞ்சரி ஏதேனும் மூலத்திலிருந்து கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியங்கள் என்றவகையில் கூட்டுத்தாபனத்தால் பெறப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்.

**9**. (அ) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். *கணக்காய்வும், கணக்குகளும்.*

(ஆ) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத் தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய முறை யான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(இ) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(ஈ) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப் பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக வும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக் காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப் பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத் தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**10**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, தலைவர், செயலாளர் அல்லது முகாமைச்சபையால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு ஆள் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயல்களுக்கான நட்டோத்தரவாதம்.

**11**. ஆள் எவரும் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்படவேண்டுமென கருதப்படுகின்ற ஏதேனும் செயலுக்காக ஏதேனும் துடர்ச்சிக்கு அல்லது வேறு ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளாதலாகாது.

கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன் மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.

**12**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் கொடுத்துத் தீர்க்கப்பட்ட பின்னர் எத்தன்மையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனமானது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும், அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடை செய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவுமான வேறு கழகத்திற்கு அல்லது கழகங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய கழகம், கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்குமுன்னர் சபையால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13**. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*